பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 02 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** இஸ்ரேலுக்கான தமது அரசுமுறைப் பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, ராஜஸ்தானின் பொக்ரானில் இன்று விமானப்படைப் பயிற்சியைப் பார்வையிடுகிறார்.

**3.** ஜம்மு-கஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டுள்ள உள்கட்டமைப்புத் திட்டங்கள் வளர்ச்சியை அதிகரிக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**4.** கனடா பிரதமர் திரு. மார்க் கார்னி நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

**5.** அல்பேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது இஸ்ரேல் பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றிரவு புதுதில்லி திரும்பினார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமது இஸ்ரேல் பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பு உறவை வலுப்படுத்துவது குறித்து வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் தமது பயணத்தின்போது மேற்கொள்ளப்பட்டதாக திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

முன்னதாக இஸ்ரேல் அதிபர் திரு. Isac Herzog-ஐயும் திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேசினார்.

பிரதமரின் இஸ்ரேல் பயணத்தின்போது வர்த்தகம், கல்வி, வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ராஜஸ்தானில் இந்திய விமானப் படையின்'வாயு சக்தி' போர்ப் பயிற்சியை பார்வையிடுகிறார்.

ஜெய்சால்மர் அருகே பொக்ரானில் விமானப்படையின் சாகசங்களை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சியில், பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், ராஜஸ்தான் முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா ஆகியோரும் கலந்துகொள்ள உள்ளனர்.

முன்னதாக, உள்நாட்டு இலகுரக போர் ஹெலிகாப்டரான 'பிரசாந்த்'-ல் குடியரசுத்தலைவர் பயணிக்கவுள்ளார்.

இது இந்தியாவிலேயே வடிவமைக்கப்பட்ட நவீன போர் ஹெலிகாப்டராகும்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டுள்ள உள்கட்டமைப்புத் திட்டங்கள் வளர்ச்சியை அதிகரிக்கும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கஷ்மீர் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையம் மற்றும் செனாப் ரயில் பாலம் போன்ற திட்டங்கள் ஜம்மு-கஷ்மீரின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ளதாக கூறினார்.

கல்வியில் ஜம்மு-கஷ்மீர் வளர்ச்சியடைந்து வருவதாகவும் குறிப்பாக பெண் கல்வி அதிகரித்து வருவதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதில் உணவுப் பதப்படுத்தும் துறை முக்கிய பங்காற்றும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

நிலையான ஆரோக்கியமான உணவுகள் தொடர்பான சர்வதேச மாநாட்டை குண்ட்லியில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

140 கோடி மக்கள் தொகை கொண்ட ஒரு நாட்டிற்கு, உணவுத் துறையில் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சி அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

உணவுத் துறையில் வளர்ச்சிக்கான இடைவெளியை நிரப்ப நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடைய வேண்டியதன் அவசியத்தை திரு. சிராக் பஸ்வான் வலியுறுத்தினார்.

<<<<>>>>

புதிய அடல் ஆய்வகங்கள் நாடுமுழுவதும் மாணவர்களிடையே படைப்பாற்றலை ஊக்குவித்துப் புதுமை கண்டுபிடிப்புகளை அதிகரிக்கும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

திரிபுரா மாநிலம் அகர்தலாவில் நாட்டின் முதல் மாநில புதுமைக் கண்டுபிடிப்பு இயக்கத்தை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆய்வக வசதிகள் பெருநகரங்களைத் தாண்டி மாவட்டங்கள், கிராமங்கள் என அனைத்து பகுதிகளுக்கும் செல்ல வேண்டும் என்று அவர் கூறினார்.

நாடு முழுவதும் **10** ஆயிரம் அடல் ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

சமூகத்தில் பின் தங்கிய பிரிவினரின் மேம்பாட்டுக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

அகமதாபாத்தில் தமது அமைச்சகம் சார்பிலான கைவினைப் பொருட்கள் கண்காட்சியை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினர் மாற்றுத் திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர் போன்றோரை பொருளாதார ரீதியாக மேம்படுத்த இதுபோன்ற கண்காட்சிகள் நடத்தப்படுவதாக திரு. வீரேந்திர குமார் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் விளையாட்டுத் துறையை மேம்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

குல்மார்க்கில் நடைபெற்ற 6-வது கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகளின் இரண்டாவது கட்ட நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், குல்மார்க்கை உலகளாவிய குளிர்கால விளையாட்டு மையமாக மாற்ற அரசு உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

கஷ்மீர் நிலம் மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளதாகவும், இங்கு வருங்காலத்தில் மேலும் அதிக அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விளையாட்டு, சுற்றுலா மற்றும் கலாச்சார நடவடிக்கைகள் இணைத்து நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

குளிர்கால விளையாட்டுகளை மேலும் வலுப்படுத்த ஜம்மு-கஷ்மீரில் தேசிய சிறப்பு மையம் நிறுவப்படும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<>>>>

உத்தரபிரதேச அரசு, ஜப்பானைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களுடன் 90 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

முதலீட்டை ஈர்க்கும் நோக்கில் அவர் இரண்டு நாள் பயணமாக ஜப்பான் சென்றுள்ளார்.

டோக்யோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெளிப்படையான கொள்கைகள், சிறந்த சட்டம் ஒழுங்கு,வலுவான உள்கட்டமைப்பு ஆகிய அம்சங்கள் காரணமாக உத்தரபிரதேசத்தின் மீது முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது என்றார்.

உத்தரப்பிரதேசத்தை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் இலக்குடன் தமது அரசு செயல்பட்டு வருவதாக திரு யோகி ஆதித்யநாத் கூறினார்.

<<<<>>>>

அசாமில் உயர்கல்விக்கு ஊக்கமளிக்கும் திட்டங்களை மாநில அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

குவஹாத்தியில் நேற்று மாணவர்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார்.

இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாதம் தோறும் நிதி உதவி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

4 லட்சம் ரூபாய்க்கும் குறைவான ஆண்டு வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இத்திட்டத்தில் பயனடைய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெண் கல்வியை ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறினார்.

<<<<>>>>

கனடா பிரதமர் திரு. மார்க் கார்னி நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

மும்பை வரும் அவர் இரண்டு நாட்கள் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

வரும் 2ஆம் தேதி புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் திரு. மார்க் கார்னி இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

<<<<>>>>

இந்தியாவுடனான ஒத்துழைப்பை மேலும் அதிகரிக்க விரும்புவதாக இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமரசூரியா கூறியுள்ளார்.

இந்தியாவின் 77-வது குடியரசு தினம் மற்றும் இலங்கையின் 78-வது சுதந்திர தினத்தையொட்டி கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியாவில் இருந்து அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவது மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறினார்.

இந்தியாவுடனான வணிகத் தொடர்புகளை அதிகரிக்க இலங்கை விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையின் நெருங்கிய நட்பு நாடு இந்தியா என்றும், சவாலான காலங்களில் இலங்கைக்கு இந்தியா உறுதுணையாக இருந்ததாகவும் டாக்டர் ஹரிணி அமரசூரியா குறிப்பிட்டார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் கூறியுள்ளார்.

ராஜஸ்தானின் பில்வாராவில் நேற்று நடைபெற்ற முதலீட்டாளர் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசிய அவர், பரஸ்பர வளர்ச்சி மற்றும் ஒத்துழைப்பில் ராஜஸ்தானுடன் இணைந்து செயல்பட மத்தியப்பிரதேச அரசு உறுதிபூண்டுள்ளதாகக் கூறினார்.

மத்தியப்பிரதேசத்தில் முதலீடுகளை ஈர்க்க வெளிப்படையான, எளிமையான நடைமுறைகள் பின்பற்றப்படுவதை மாநில அரசு உறுதி செய்துள்ளது என்று திரு மோகன் யாதவ் தெரிவித்தார்.

ராஜஸ்தானைச் சேர்ந்த 250 க்கும் மேற்பட்ட தொழில்துறையினர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<>>>>

அல்பேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

இப்போட்டியின் மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் Priyanshi Prajapat வெள்ளிப் பதக்கத்தையும், Muskan வெண்கலப் பதக்கதையும் வென்றனர்.

------------

சிங்கப்பூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Saneeth Dayanand காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 23-21, 21-18 என்ற செட் கணக்கில் சிங்கப்பூரின் Jia Wei Joel-ஐ வென்றார்.

------------

குருகிராமில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sravya Shivani - ஜப்பானின் Michika Ozeki இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-6, 4-6, 10-5 என்ற செட் கணக்கில் ஜெர்மனியின் Anastasiya - உஸ்பெகிஸ்தானின் Milana இணையை வென்றது.

--------------

உலக கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 72 ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வேயை வென்றது.

**<<<<The End>>>>**